RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2142

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# உபதேசமாலையில் குருநெறியும் திருநெறியும்

இரா. மதன் குமார் [அ,*]

[அ] மொழிகள் துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# Guru Neri and Thiruneri in Upadesamalai

R. Madhan Kumar [a,*]

[a] Department of Languages, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India.

*Corresponding author Email: madhan.r@kahedu.edu.in

DOI: https://doi.org/10.54392/ijot2142

Received: 02-09-2021; Revised: 17-11-2021; Accepted: 18-11-2021 Published: 25-11-2021

**Abstract:** Tiruvavaduthurai Athenathu pandara Satras fourteen. The books of grace in this collection are given by Arulthiru Ambalavana Desikar, Arulthiru Dakshinamurthy Desikar, Arulthiru Swaminatha Desikar and Arulthiru Perur Velappadesikas. Among them is The Admonition Venpa, one of the ten books of Grace given by Arulthiru Ambalavana Desikas. This book is written by the author in his language to express the blessings of his wise guru Namachivaya Murthis. This book condemns the ignorance that we will be directly subjected to yoga and meet the nitta, excluding the steps of right and work. This book emphasizes the clear method of receiving the fire through the teaching of the Jnanaguru and following its instructions properly and following the yoga system. In accordance with the Saiva ethics of 'Thirumeni Kandal of The Clear Guru' and 'Thiruvarthai Ketal of The Clear Guru', The Lord of The Guru, Namachivaya Murthis, has been blessed with the blessings of 'Enadurai dhanathuraiyaga. In the final verse of this book, He speaks of 'Namachivaya Murtis' as evidence of the enduring grace of The Ambalavana Desikas towards his jnanasiriyas. This article examines the conditions in which this book is translated into ways in which yoga can be attained through the aryans, the temple worship, the sariyai, and the work of the Shiva puja.

**Keywords:** Shiva pujas, Workship, Aryans, Venpa

## முன்னுரை

குருவருளும் திருவருளும் மன்னுயிர்களுக்கு மாநிதியாக விளங்குகின்றன. அவ்வகையில் திருவாவடுதுறை ஆதீனப் பண்டார சாத்திரங்களும் நுகரக்குறையாத நிறைசெல்வமென குருவருளையும், திருவருளையும் உயிரறிவில் பொலியச்செய்கின்றன. அவை சிந்தையின் நிறைவாகிய சித்தாந்தத்தெளிவுடன் சிவநெறி நிற்கவல்லவர்களுக்கு எய்ப்பினில் வைப்பாக விளங்குகின்றன. திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டார சாத்திரங்கள் என்றமைந்த தொகுப்பில், ஆதீனத்து குருமுதல்வர்களாகிய அருள்திரு அம்பலவாண தேசிகர், அருள்திரு தட்சிணாமூர்த்தி தேசிகர், அருள்திரு சுவாமிநாத தேசிகர் மற்றும் அருள்திரு பேரூர் வேலப்பதேசிகர் ஆகியோர் இயற்றியருளிய பதினான்கு சாத்திரநூல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் அருள்திரு அம்பலவாண தேசிகர் அருளிய பத்து அருள்நூல்களுள் உபதேச வெண்பாவும் ஒன்றாக விளங்குகிறது.

தமது குருமுதல்வராகிய அருள்திரு நமசிவாய மூர்த்திகளது அருளுபதேசத்தைத் தாம் பெற்றுய்ந்த வண்ணம், ஆருயிர்களுக்கும் உபதேசிக்கின்றவகையில் ஆசிரியர் இந்நூலினை இயற்றியருளியுள்ளார். நமச்சிவாய மூர்த்திகளே உபதேச வெண்பாவின் உள்ளுறைப்பொருளாக விளங்குகிறார் என்று ஆசிரியர் இந்நூலில் அறிவுறுத்தியுள்ள பாங்கு, வாழையடி வாழையெனத் தொடர்கின்ற திருவாவடுதுறை ஆதீனத்து குருமரபின் மேன்மையினை உணர்த்துகிறது.

சரியை முதலான நால்வகை நெறிகளையும் படிநிலைகளாகக்கொண்டு உயிர்கள் நிட்டை கூடுகின்ற திருநெறியை இந்நூல் அறிவுறுத்துகிறது. சரியை, கிரியை ஆகிய படிநிலைகளைத் தவிர்த்து நேரிடையாக யோகத்தால் சிவத்தை உணர முற்படுகின்ற அறியாமையை நீக்கி இந்நூல் மெய்யுணர்வை வாய்க்கச்செய்கிற திறத்தை இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.

## முத்திநெறிக்குக் குருவருளே துணை

சிவமே பரம்பொருள் என்று உணர்வதும், அரனே அப்பரம்பொருள் என்று தெளிவதும், அத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கு சிவாகமங்களே கருவி என்பதும், அவற்றின் வழியே அன்புநெறி தழைத்து பக்தி சிறக்கும் என்பதும், சிவாகமங்களின் தெளிபொருளாக சரியையாதி நெறிகள் விளங்குகின்றன என்பதுமாகிய மெய்யறிவு வாய்க்கப்பெற்று முத்திநெறிக்குத் தலைப்படுவதற்கு குருவருளே துணையாகும் என்பதை,

'முத்திக்கு மூலம் மொழியுங் குருக் கிருபை

பத்திக்கு மூலம் பகருமன்பு - புத்திக்கு

மூலம் அரனெவர்க்கும் மூலமே யென்றறிவில்

சாலமதிப் பாரே தவர்'

என்றமைந்த பாடல் விளக்குகிறது. உயிரறிவில் ஆணவ மலத்தின் வலிமையினை மெலிவிக்க வேண்டி அரனே உயிர்களைப் பிறப்பிறப்புகளில் கூட்டுவித்தும், மாயை மற்றும் கன்ம மலங்களை ஊட்டுவித்தும் பல பிறப்புகளின் வழியாகவும் நல்லறிவு தழைப்பதற்குக் கருணை செய்கிறான். அந்நிலையை தேசிகர் அவர்கள், 'புத்திக்கு மூலம் அரன்' என்று குறித்தருளியுள்ளார். மேலும், குருவின் திருவுருவில் அரனே வந்தருளி முத்திக்குரிய மெய்நெறியிலும் வழிநடத்தியருள்வார்' என்பதையும், 'முத்திக்கு மூலம் மொழியுங் குருக்கிருபை' என்று சுட்டியருளியுள்ளார் (Ambalavana Desikar, 1959a).

## முத்திநெறிக்குக் குருமொழியே துணை

முத்திநெறிக்குத் தலைப்பட்டோருக்கும் மல வாதனை அமைகின்ற நிலை உண்டு. அந்நிலையில் குருமொழியே துணையாக அமைந்து அவர்களை முத்திநெறியில் நிலைப்படுத்தும். எந்நிலைக்கும் கட்டுப்படாத நச்சரவானது, உறுதியான மந்திரச் சொல் உடையோரது மொழிக்குக் கட்டுப்படும். அதுபோல, முத்திநெறிக்குத் தலைப்படுவோரும் மலவாதனைகளால் அமைகின்ற அலைவுகள் நீங்கி, முத்திநெறியில் நின்றுயர,

'புற்றரவே ஆடும் புகழ்மந் திரத்தார் முன்

மற்றரவுக் காட மதியுண்டோ - சற்குருவை

ஒட்டி நடக்கும் உயர்ந்தவர்க்கும் ஒவ்வாமல்

விட்டுநடப் பார்க்கும் விதி'

என்று தேசிகர் அவர்கள் நன்னெறி உரைத்துள்ளார் (Ambalavana Desikar, 1959a).

## நால்வகை நெறி காட்டும் குருமொழி

குருமொழி வழியே சரியை முதலான நால்வகை நெறி நிற்போருக்கே சிவஞானம் கைகூடுவதை,

'நீரரவு மந்திரத்தின் நில்லாது நீதியல்லாப்

பார்நரருக் குண்டோ பரமகுருச் - சீரருளைச்

சிந்தித்தார்க் கன்றோ சிவஞானம் சற்குருவை

வந்தித்தார்க் கன்றோ வரும்

என்றமைந்த குருமொழி உணர்த்தக் காணலாம் (Ambalavana Desikar, 1959a).

## சிவபரத்துவ உண்மையினைத் தெளிதல்

மண்ணினில் பிறந்தார்களது விருப்பச்செயலானது, போக விருப்பம் மற்றும் முத்தி விருப்பம் என்று இரு வகைப்படும். உலக இன்பத்தை விரும்புபவர்கள் புத்தி காமர் எனப்பெறுவர். அவர்கள் ஐம்புலன்களின் வழிப்பட்ட சிற்றறிவால் இயங்குபவர்கள். ஆனால், முத்திநெறிக்குத் தலைப்பட்டோரின் ஐந்து பேரறிவும் குருவின் நன்மொழி வழியே பண்பட்டு மேம்படுதலை,

'தேமருவு காமச் செயலிரண்டாஞ் செல்புத்தி

காமரையே நீத்துக் கருதுமுத்தி - காமரையே

உற்றார் தமக்கே உறுமுத்தி நீத்ததனைப்

பெற்றார்க்கும் உண்டோமெய்ப் பேறு'

என தேசிகரின் அருள்மொழி சுட்டியமைகிறது (Ambalavana Desikar, 1959a).

## அங்கத்தை மாற்றினோருக்கே மதி

உயிரானது உடம்பையே தான் என்று கருதி மயங்குகிறது. உடல் - அழியக்கூடியது. அது அபத்தக்களஞ்சியமாக விளங்கவல்லது. அழிகின்ற இவ்வுடலே அழியாத பேரின்பப் பெருநெறிக்குக் கருவியாகும். குருஉபதேசத்தின் வழி நிற்போர் மட்டுமே இவ்வுடலைப் பேரின்பப்பெருநெறிக்குக் கருவியாக்கி உய்வர். உயிருக்கு வாய்க்கவேண்டிய அத்தகைய ஞானத்தெளிவினை தேசிகர்,

'பற்றற்ற கண்ணே பசு விளங்கும் மேலருளைப்

பற்றுதலால் அந்தப் பசுவுமறும் - குற்றமற்ற

முத்திக்கும் உண்டோ மொழியும் உடல்விகற்பம்

புத்திக்கே வாய்க்கும் பொருள்'

என்றருளியுள்ளார் (Ambalavana Desikar, 1959a). மேற்கண்ட பாடலானது, முத்திநிலையிலும் உடல் உண்டு. அது சூக்கும உடல் அல்லது அதிசூக்கும உடல் என்று உரைக்கப்படுகின்ற கருத்தை மறுத்துரைப்பதாக அமைந்துள்ளது. உயிருக்கு ஞானகுருவின் உபதேசத்தின் வழியே தத்துவ சுத்தி ஏற்பட்டு பாசப்பற்று நீங்குகிறது. அதனால் உயிரறிவில் ஆன்ம உண்மை விளங்கி, உடல் சார்பினை நீங்குகின்ற நன்னிலை வாய்க்கிறது. அதனால் முத்திநிலையில் உடல் சார்பு அமைகின்ற நிலை இல்லை என்பதை உணரலாம் (Ambalavana Desikar et al., 1959b).

'அங்கமே பொல்லா அவத்தமாம் ஆவிபொய்

அங்கமே அல்ல அறிவாகும் - அங்கத்தை

மாற்றினார்க் கன்றோ மதியாகும் மையலுற்றுத்

தேற்றினார்க் குண்டோ செயல்'

## உயிரின் அறியாமை

உயிரானது, உடலை யானென்றும், உயிராகிய தன்னை எனதென்றும் மயங்கி உணர்கிறது. குருவின் உபதேச மொழிவழியே அலைவுகள் நீங்கி, உயிரை யான் என்றும், உடலை எனது என்றும் தெளிகின்ற நன்னிலையிலேயே மெய்ஞ்ஞானத்துக்குக் கருவியாகிய திருவருள் வாய்க்கும்.

'எனதென்றும் இல்லத்தை யானென்றுங் காய

மனதொன்றித் தன்றோ மலத்தால் - நினைவொன்றி

அங்கம் எனதாய் அடைந்தபோ தன்றோமெய்

தங்குமரு ளாகத் தரும்'

யான் என்று உணர்ந்துவந்த உடலை, எனது என்று உயிர் உணர்கின்ற ஞானம் வாய்த்தவழி உயிரானது ஆணவமலச் சார்பிலிருந்து நீங்கத் தொடங்கியது எனலாம் (Ambalavana Desikar, 1959a). குரு உபதேசத்தின் வழியே இத்தகைய மெய்யறிவு உயிரில் நிலைக்கின்ற தன்மையினை, 'தீவிரதர சத்திநிபாதம்' என்கிறோம். அவ்வாறு தீவிரதர அருள்வீழ்ச்சியின் வழியே சிவத்தை அடைய இயலாத உயிரானது, 'அது நீயாகிறாய்' என்கிற சிவோஹம் பாவனையால் படிமுறையில் சிவத்தை அடையும்.

'காயமே தானாய்க் கருதும்போது ஆவிமல

மாயமே அல்லாது மற்றுண்டோ - காயம்

தனதாகும் போது தகுமுயிரும் ஒன்றாய்

நினைவாகும் அன்றோ நிறைந்து'

## குருவருளின் மாண்பு

உயிரானது உடலோடு கூடியிருக்கின்றபோதிலும், கருவி கரணங்களின் சார்பு நீங்கிய நிலையிலும் அறிவுமயமாக நிறைவுற்று விளங்கும். இதனை தேசிகர் அவர்கள்,

'யானென்னும் காயம் எனதென்று பேதித்தும்

ஊனொன்றி நிற்கும் உயிரன்றோ - தானொன்றில்

நில்லாத போது நிறைவாகல் தன்னியல்பாம்

இல்லார் பொதுவியல்பென்று எண்'

என்று குறித்தருளியுள்ளார். உயிர் தனது சிறப்பியல்பினை உணர்தல் குருவருளின் துணையாலாகும் என்பதனை மேற்கண்ட பாடல் உணர்த்தியுள்ளது (Ambalavana Desikar, 1959a).

## மலம் அத்தனையும் அன்னியமாகும்

பதி, பசு, பாசம் என்கிற முப்பொருள் உண்மையினை ஆராய்வதன் வாயிலாகவே உயிர் மெய்யறிவுக்குத் தலைப்படுகிறது. ஞானாசிரியர், உயிரின் பொதுவியல்பின் வழியே சிறப்பியல்பினை உயிருக்கு உணர்த்தியருள்கிறார். முப்பொருள்களின் பொதுவியல்பையும் குருமொழியால் உணர்ந்த உயிரானது, உடற்சார்பினை நீக்கிச் சிவச்சார்புறுதல் ஞானாசிரியர் மீதான பேரன்பினால் அமைவதாகும்.

'வாதித்த காயத்தை மாற்றாமல் ஆசிரியர்

போதித்த தெல்லாம் பொதுவியல்பாம்

அங்கத்தை மாற்றும் அனுக்கிரகம் ஞானத்தின்

சங்கத்தால் உற்ற சதுர்'

## கருணை வீடடைதல் வினோதம்

ஞானியாகிய குருவைப் பிரியாமல், அவர்தம் ஞானஉபதேசத்தைக் கேட்டும், தெளிந்தும், சிந்தித்தும் இருத்தலால் நிட்டை கூடுதலாகிய ஞான அனுபவம் உயிருக்கு வாய்க்கும். அத்தகைய பக்குவநிலையில் அன்றி, தனதறிவை ஏறிட்டுக்கொண்டு சிவத்தை அடைய முற்படுவோர்களது செயலானது பட்னற்றதாகும் என்பதனைத் தேசிகர் அவர்கள்,

'கேட்டலொரு நான்குங் கிடைத்தபேர்க் கருணை

வீட்டை அடைதல் வினோதமாம் - மாட்டாதார்

வீட்டை மருவ வெறு நிட்டை செய்வதங்கச்

சேட்டையென்ப தன்றோ திடம்'

என விளக்கியருளியுள்ளார் (Ambalavana Desikar, 1959a).

## சரியையும் கிரியையும்

முத்திநெறியில் நிற்போருக்கு சரியை, கிரியைம் யோகம் மற்றும் ஞானம் ஆகியவை படிநிலைகளாகும். முன்னவையாகிய சரியை மற்றும் கிரியை ஆகியவற்றை விடுத்து நேரிடையாக யோகநெறிக்குத் தலைப்படுதல் அறிவீனம் என்பதனை தேசிகர் அவர்கள்,

'சரியை கிரியையெனத் தங்கும் இரண்டுள்

உரியதொரு யோகம் ஒடுங்கும் - தெரிய

வருமவர்க்கே எல்லா மதியாம் அதனைப்

பிரிவார்க்கும் உண்டே மெய்ப் பேறு'

என்ற திருப்பாடலின் வழியே உணர்த்தியுள்ளார் (Ambalavana Desikar, 1959a). சரியை என்பது புறவழிபாடாகவும், கிரியை என்பது, அகப்புற வழிபாடாகவும் விளங்கவல்லது. சரியை மற்றும் கிரியை நெறியில் பயில்கின்ற போதிலும், சரியையில் யோகம், கிரியையில் யோகம் என்கிற நிலைகள் அமைகின்றன. அதனால் சரியை மற்றும் கிரியை ஆகியவற்றைப் புறவழிபாடு என ஒதுக்குதல் அறியாமை என்பதனை மேற்கண்ட பாடல் வலியுறுத்தக் காணலாம்.

## சமய மற்றும் விசேட தீக்கைகள்

முத்திநெறிக்குத் தலைப்படுவார்களுக்கு ஞானாசிரியர் சமய மற்றும் விசேட தீக்கைகளை வழங்கியருள்வார். சிவதீக்கையினைப் பெற்று சிவஞானப்பேற்றில் நிலைகொள்வதே உயிருக்கு வேண்டப்படுவதாகும். சிவசம்பந்தமே உயிரின் இயல்பாகும். ஆணவமலத் தடையினால் உயிரானது தனது உண்மைச் சார்பினை மறந்து, சிவசம்பந்தத்தை உணராமல் விளங்குகிறது. ஞானகுருவின் அருள்மொழியால் உயிரறிவில் விளங்கிய மெய்யறிவானது தொடர்ந்து நிலைகொள்வதற்காகவே இத்தகைய சமய மற்றும் விசேட தீக்கைகள் என்பதை தேசிகர் அவர்கள்,

'சமய விசேடம் தகுஞானம் என்ன

உமையொரு பாகர் உரைத்தது - அமைய இருந்து

எட்டுதற்கோ ஈசற்கு இசைந்ததொழி லோடிசைந்தங்கு

ஒட்டுதற்கோ ஒன்றை உரை'

என்று விளக்கியருளியுள்ளார் (Ambalavana Desikar, 1959a; Ambalavana Desikar, 1959b).

## சிவத்தியானமே யோகம்

சமய மற்றும் விசேட தீக்கைகளுள் யோகநெறி அடங்கியுள்ளது. சிவத்தியானமே யோகம். இதனை உணராதவர்கள் சிவநெறியை விடுத்து, நேரிடையாக யோகநெறிக்குத் தலைப்படுகிற அறியாமையை மேற்கொள்கின்றனர்.

'ஊகித்து இதனை உணராதார் அன்றோமெய்

யோகத்தை வேறே உணர்வதுமெய் - யோகம்

பிரிவதறிவ தன்று பிரியாத் தொழிலில்

தரித்தறிவ தாகத் தகும்.'

## சும்மா இருத்தல் நிட்டையாகாது

அறியத்தக்க சைவ நீதியாகிய சிவாகமங்களை தேசிகரிடமிருந்து உபதேசமுறையால் அறிந்து அவ்வழி நிற்றலால் நிட்டை கைகூடும். சிவாகம உள்பொருளையும் உணராமல், புலன்களையும் வெல்லாமல், தன்னையும், தலைவனையும், வினையையும், வினை நீங்கிச் செல்லும் நெறியையும் உணராமல் சும்மா இருத்தல் நிட்டையாகாது (Ambalavana Desikar, 1959a)

'சொல்லும் சிவாகமத்தின் சூழனைத்தும் பாராமல்

வெல்லும் புலனைந்தும் வெல்லாமல் - செல்லுநெறி

தன்னை வினையைத் தலைவனையுங் காணாமல்

மன்னுதலோ நிட்டை வளம்'

## சிவபூசை முதலான அனுட்டானங்கள்

சிவதீக்கைக்குரிய அனுட்டானமுறைகளை நிலையாகப் பின்பற்றி உயிரானது மலச்சார்பினை நீக்கிவருதலே முத்திநெறிக்குரிய வழியாகும். முன்னைத் தவப்பயனால் இம்மையில் சிவபூசை முதலான ஒழுக்கங்கள் அமைகின்றன. அவ்வொழுக்கத்தை முறையாகப் பின்பற்றுவதால் அரனருள் கிடைக்கும் (Ambalavana Desikar, 1959a)

'தீக்கைதனக் குற்ற செயல் பலவுஞ்செய்து மலம்

நீக்குதலே அன்றோ நிலையாகும் - பாக்கியமாம்

பூசையின்மேல் மோகப் புணர்ப்பல்லால் மற்றுமோர்

ஆசையின்மேல் உண்டோ அரன்'

## அத்துவித முத்திக்குக் கருவிகள்

சிவபூசையும், தியானமும் ஞானநெறியின் வழியான உண்மை அன்பால் அமைவன. ஞானமயமான அத்துவித முத்திநிலை அனுபவத்துக்கு அடிப்படையாக அரனாரின் திருவுருவை சிந்தையில் நிலைநிறுத்தி உய்வதற்கு சிவபூசையும், தியானமும் கருவியாகின்றன (Ambalavana Desikar, 1959a).

'பூசை தியானம் பொருந்துந் தொழிலனைத்தும்

நேசித்தார்க் கன்றோ நிலையாகும் - தேசுற்ற

அத்து விதத்தோடு அடைவதெல்லாம் நன்மேனி

புத்தியின்மேல் உற்ற பொருள்'

## நிட்டைக்கான வழி

கருணையே உருவாக விளங்குகின்ற ஞானாசிரியரே சிவகுருநாதனாக எழுந்தருளி, பக்குவ ஆன்மாவுக்கு சிவாகம நற்பொருளை உபதேசித்தருள்கின்றார். சுருதி, குரு வாக்கு, தன் அனுபவம் ஆகிய மூன்றும் முத்திநெறியில் பொருந்துவதே முறையாகும். அத்தகைய முறையின்றி அமைதல் நிட்டைக்கான வழியாகாது (Ambalavana Desikar, 1959a).

'சுருதிகுரு வாக்குச் சுவானுபம் ஒன்றே

மருவுவதே ஞானவழக் காகும் - சுருதி

அடையாமல் நிட்டை அடைவதெல்லாம் முத்தித்

தடையாகும் என்னத் தகும்'

## பேரின்ப வடிவினர்

குருநெறி வழியே சிவாகம நுண்பொருளை உணர்ந்து, புறம்பான புன்னெறிகளை விலக்கி, சிவநெறியில் நிலையாக நின்று, முடிவான ஞானநெறிக்குத் தலைப்பட்டு, சிந்தையிலிருந்து நீங்காத சிவஞானச் சார்பினால் சிவமாகத் தோய்ந்தவர்களே பேரின்ப வடிவினராவர் (Ambalavana Desikar, 1959a).

'சன்மார்க்கம் என்னத் தகுநூலை ஓதியதன்

புன்மார்க்க மெல்லாம் புறம்பாக்கி - நன்மார்க்கம்

சார்ந்தறிவைச் சார்ந்து தகும்பூ ரணமாகத்

தோய்ந்தபேர் அன்றோ சுகர்'

## முடிவுரை

குருமுதல்வர்தம் ஞானமொழிகள் சிவாகமங்களின் வெளிப்பாடாக விளங்கி முத்திக்கு வாயிலாகின்றன. அம்மொழிகள் உயிருக்கு அன்புநெறியைக்காட்டி மேலும் பக்திநெறியில் உயிரை நிலைபெறச்செய்கின்றன. இக்கருத்தை உபதேசவெண்பாவின் இரண்டாம் பாடல் வலியுறுத்துகிறது. குருமுதல்வரை சிவமாகவே கருதி ஞானநெறிக்குத் தலைப்படுவோருக்கு முத்திகாமர்களாகிய 'நல்லார் இணக்கம்' இன்றியமையாதது என்ற கருத்து இந்நூலின் எட்டாவது திருப்பாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. உடலைத் தானென்றும், உயிரைத் தன்னுடைமை என்றும் மயங்குதல், மலச்சார்பின் வழிப்பட்ட உயிரின் அறியாமையாகும். சரியை முதலான நன்னெறியைச் சார்தலால் உயிரிடத்தில் 'யான்', 'எனது' என்ற அறியாமை நீங்கி, மெய்யறிவுநிலையாக திருவருளைச் சார்ந்திருக்கின்ற உண்மையியல்பு விளங்குவதை உபதேசவெண்பா விளக்கியுள்ளது. ஞானகுருவிடத்தில் கேட்டல், தெளிதல் மற்றும் சிந்தித்தல் ஆகிய ஞான அணுகுமுறைகளால் நிட்டைகூடலாகிய பேரனுபவம் உயிருக்கு வாய்த்தலை உபதேச வெண்பாவின் இருபதாவது பாடல் வலியுறுத்தியுள்ளது. இவ்வாறு உபதேசமாலையில் ஞானநெறிக்குரிய உபதேசங்களும், அணுகுமுறைகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## References

Ambalavana Desikar, (1959a) Pandara Sathirangal, Thiruvavaduthurai Adheenam, Mayiladuthurai, India.

Ambalavana Desikar, Dakshinamurthy Desikar, Swaminatha desikar, (1959b) Pandara Sathirangal - Dasakariyangal, Thiruvavaduthurai Adheenam, Mayiladuthurai, India.

## Acknowledgement

Nil

## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

## About the License

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

R. Madhan Kumar, Guru Neri And Thiruneri in Upadesamalai, Indian Journal of Tamil, 2(4) (2021) 9-16. https://doi.org/10.54392/ijot2142